**செய்தி வெளியீடு எண்: 040** **நாள்: 16.01.2019**

**செய்தி வெளியீடு**

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் 102ஆவது பிறந்தநாள் அரசு விழாவாக கொண்டாடப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு சென்னை, கிண்டி, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு 17.01.2019 அன்று காலை 11.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள். மேலும், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு நினைவாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவம் பொறித்த சிறப்பு நாணயத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் வெளியிடவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்த நாளான ஜனவரி 17ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் எம்.கோபாலமேனன் – சத்தியபாமா இணையருக்கு 5ஆவது மகனாக இலங்கையில் உள்ள கண்டியில் 17.01.1917இல் பிறந்தார். எம்.ஜி.ஆருக்கு இரண்டரை வயதாகும் போது அவரது தந்தை இறந்தார். வறுமையின் காரணமாக எம்.ஜி.ஆர் படிப்பை நிறுத்தி விட்டு, நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். இலவகுசா நாடகத்தில் இலவனாக எம்.ஜி.ஆர். நடித்ததைப் பார்த்து அனைவரும் பாராட்டினர். எம்.ஜி.ஆர். நடித்த முதல் படம் ‘சதிலீலாவதி’. எம்.ஜி.ஆர் கதாநாயகனாக நடித்த முதல் படம் இராஜகுமாரி. அதனைத்தொடர்ந்து பல்வேறு படங்களில் நடித்தார்.

1958இல் எம்.ஜி.ஆர். 'நாடோடி மன்னன்' படத்தை சொந்தமாக தயாரித்து இயக்கினார். அண்ணாவின் மீது கொண்ட பற்றினால் அரசியலிலும் ஈடுபடத்தொடங்கினார். சினிமா துறையிலும் அதே நேரத்தில் அரசியலிலும் அவர் புகழ் ஓங்க ஆரம்பித்தது. 1969இல் அண்ணாவின் மறைவுக்குப் பின் எம்.ஜி.ஆர். தி.மு.கவில் பொருளாளர் ஆனார். தி.மு.கழகத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக எம்.ஜி.ஆர். 1972இல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கினார். 1977இல் நடந்த தேர்தலில் எம்.ஜி.ஆர். ஆட்சியைப் பிடித்து முதலமைச்சர் ஆனார்.

1981இல் மதுரையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினை நடத்தினார். ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகள் படித்துப் பயன்பெற சத்துணவுத் திட்டத்தினை கொண்டு வந்தார். புரட்சிகரமான கருத்துகளைக் கொண்ட கதாப்பாத்திரங்களில் நடித்ததால் 'புரட்சித் தலைவர்' என்றும், 'மக்கள் திலகம்' என்றும் புகழப்பட்டார். ஈட்டிய செல்வத்தை ஏழை, எளிய மக்களுக்கு வாரிவழங்கியதால் 'பொன்மனச் செம்மல்' எனவும் அழைக்கப்பட்டார். மக்களின் மனங்களில் இதய தெய்வமாகப் போற்றப்பட்டு இன்றும் தமிழக மக்களின் இதயங்களில் நீங்கா இடம் பெற்ற எம்.ஜி.ஆர் அவர்கள் 1987 டிசம்பர் 24 அன்று உலகத் தமிழர்களை துன்பத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்தார்.

தமிழக அரசின் சார்பில், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு சென்னை, கிண்டி, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு 17.01.2019 அன்று காலை 11.00 மணியளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர், அரசு தலைமைக் கொறடா, தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி – புது டெல்லி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

மேலும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு நினைவாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவம் பொறித்த சிறப்பு நாணயத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் வெளியிடவுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**